பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 10 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியை இந்தியா முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் பேச்சு நடத்தியுள்ளார்.
3. ஹரியானா முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, அமைச்சர்களுக்கான இலாக்காக்களை ஒதுக்கீடு செய்துள்ளார்.
4. தமிழகத்தில் உள்ள கோவில்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

உலகின் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியை இந்தியா முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் தனியார் ஊடகப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த உலக அளவிலான மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், இந்தியா அனைத்து துறைகளிலும் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

எதிர்காலம் குறித்த கேள்விக்கு ஒட்டுமொத்த உலகும் நம்பிக்கையின்றி இருக்கும்போது அவை அனைத்திற்கும் கலங்கரை விளக்கமாக இந்தியா திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்று காலத்திலும் உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சூழ்நிலையிலும் இந்தியா தனது முழுமையான பங்களிப்பை செலுத்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றம், போர் சூழல் போன்ற நிலைகளிலும் இந்தியா மிகத்தெளிவான நிலையை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்து 125 நாட்களில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான ஒன்பது லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அவர், புதிதாக 15 வந்தேபாரத் ரயில்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், எட்டு விமான நிலையங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்ற வருவதாகவும் கூறினார்.

ஐந்து லட்சம் வீடுகளில் சூரிய மின்சக்தி கூரைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், 90 கோடி மரங்கள் கடந்த 125 நாட்களில் நடப்பட்டுள்ளதகாவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் பங்குச்சந்தையும் 700 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலக ஃபின்டெக் திருவிழா, செமிகண்டக்டர் உற்பத்திக்கான உலகளாவிய கட்டமைப்பு, சர்வதேச புதுப்பிக்க எரிசக்தி மாநாடு உள்ளிட்ட முக்கிய நிகழ்ச்சிகளை இந்தியா முன்னின்று நடத்தியுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இது வெறும் நிகழ்ச்சிகள் மட்டுமல்ல இந்தியாவின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சிங்கப்பூர் தேசிய பல்கலக்கழகத்துடன் இணைந்து உயர்படிப்புகளுக்கான பாடத்திட்டங்களை மேம்படுத்துவது, ஆராய்ச்சி திட்டங்களை செயல்படுத்துவது ஆகியவை குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் அப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு டாங் இங் **chye** -வுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

தமது சிங்கப்பூர் பயணத்தின் முக்கிய நிகழ்வாக சமூக வலைதளத்தில் இந்த சந்திப்பு குறித்து தெரிவித்துள்ள திரு தர்மேந்திரபிரதான் இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்வது குறித்து தாம் விவாதித்ததாகக் கூறியுள்ளார்.

மேம்பாட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய புத்தாக்க தொழில் நிறுவனங்களை கொண்டு வருவதற்கான பாடத்திட்டங்கள், மருத்துவ படிப்புகள், மின்னணு மயமாக்கல் உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நில அளவையில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான சர்வதேச பயிற்சி முகாமை மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் நில அளவை தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை எவ்வளவு பயன்படுத்துவது மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்டு மாதிரி திட்டத்தினை அறிமுகப்படுத்துவது ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது.

மேலும் நில அளவை தொடர்பான வரைமுறைகள், தரவுகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

மத்திய அரசின் பல்வேறு துறைசார்ந்த அதிகாரிகள், மாநிலங்களின் வருவாய் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் செயலாளர்கள், சர்வதேச நிபுணர்கள், தொழில்நுட்ப அறிஞர்கள் ஆகியோர் இந்த 2 நாள் பயிற்சி முகாமில் கலந்துகொள்கின்றனர்.

**[]<<<>>>[]**

ஹரியானாவின் புதிய முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு நயாப் சிங் சைனி, தமது அரசின் அமைச்சர்களுக்கான இலாக்காக்களை ஒதுக்கீடு செய்துள்ளார்.

உள்துறை, நிதி, திட்டமிடல், விற்பனை வரி உள்ளிட்ட 12 துறைகள் முதலமைச்சர் வசமே உள்ளன.

மூத்த அமைச்சர் திரு அனில் விஜ்-க்கு மின்சாரம், போக்குவரத்து ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு விபுல் கோயலுக்கு நகர்புற அமைப்புகள், வருவாய், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு கிருஷ்ணாலால் பன்வாருக்கு மாநில மேம்பாடு, பஞ்சாத்துராஜ் துறைகள் அளிக்கப்பட்டுள்ளன.

திரு ராவ் நர்பீருக்கு தொழில் மற்றும் சுற்றுச்சூழல் துறை அளிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள கோவில்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.,

சென்னையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கோவில் நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றை மீட்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) ---45 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழக காவல்துறை சார்பில் காவலர் வீர வணக்க நாள் இன்று அனுசரிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் நாட்டின் எல்லையை ராணுவ வீரர்கள் பாதுகாப்பதுபோல நமது இல்லங்களை பாதுகாக்கும் பணியை காவல்துறையினர் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவத்துள்ளார்.

தங்கள் உயிரையும் துச்சமென நினைத்து கடமையாற்றும்போது உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களைப் போற்றி இந்நாளில் வீர வணக்கம் செலுத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி சென்னையில் உள்ள காவலர் நினைவு சின்னத்தில் தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் திரு சங்கர். ஜிவால், தமிழக காவல்துறையில் பணியின்போது வீர மரணமடைந்த காவலர்களுக்கு மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

[]<<<>>>[]

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகள் தூத்துக்குடி மாவட்ட்தில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதற்கான விழிப்புணர்வு வாகனம் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று விவசாயிகள், தொழிலாளர்கள் என பலதரப்பு மக்களிடையேயும் சிறு தானிய விவசாயம் மற்றும் அவற்றின் பயன்பாடு குறிதது எடுத்துக்கூறி வருவதாக மாவட்ட வேளாண் இணை இயக்குநர் திரு பாலசுப்ரமணியன் தெரிவித்தார்.,

*( சவுண்ட்பைட் - பாலசுப்ரமணியன ) ---37 செகண்ட்*

[]<<<>>>[]

சிறு நகரங்களை இணைக்கும் விதத்தில் தொடங்கப்பட்ட உடான் விமான சேவையின் எட்டாம் ஆண்டு இன்று கொண்டாடப்படுகிறது.

இந்தத் திட்டம் 2016-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21-ஆம் தேதி மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை சார்பில் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் பெருமளவிலான மக்கள் பயனடைந்து வருவதாக விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர ‘ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.,

பதக்கம் வென்ற தீபிகா குமாரிக்கு மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

ஜாம்ஷெட்பூரில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்திரபிரதேச அணி – தில்லி அணியையும், புனே அணி – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

தைவானில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இன்று ஜப்பானின் **kokoro Isomura** -யை எதிர்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் நெட்பால் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மாலத்தீவை எதிர்கொள்கிறது.

பெங்களுருவில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.